Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 17 of 2021**

**Deposition of P.W.17 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. செந்தில்குமார் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of September 2025.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது சேலம் மாவட்ட இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தின் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.01.2015ம் தேதி சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியிலிருந்த போது பரமத்தி காவல் ஆய்வாளரின் அழைப்பின் பேரில் பரமத்தி காவல் நிலைய குற்ற எண்.15/2025 சம்பந்தப்பட்ட குற்ற நிகழ்விடத்தை 25.01.2015ம் தேதி இரவு 11.30 மணிக்கு சென்றேன். அப்போது போதிய வெளிச்சம் இல்லாததால் 26.01.2015ம் தேதி காலை 7.30 மணிக்கு அங்கு சென்று ஆய்வு செய்ததன் அடிப்படையில் சம்பவ இடத்தில் பயன்படுத்தப்பட்ட கேஸ் சிலிண்டரில் கேஸ் லீக் ஆகி கடையில் உள்ளே இருந்த குளிர்பதன பெட்டியில் மின்கசிவு ஏற்பட்டு விபத்து நடந்திருக்கலாம் என்று கருத்து வழங்கினேன். மேலும், சம்பவ இடத்திலிருந்து ரெகுலேட்டர் டியூப் மற்றும் அடுப்பு மற்றும் ஸ்டவ் ஆகியவற்றில் பழுது ஏற்பட்டுள்ளதா என்பதை கண்டறியவும் சம்பவ இடத்தில் சேகரிக்கப்பட்ட மாதிரியில் வெடி மருந்து பொருள் உள்ளதா என்பதை ஆய்வு செய்வதற்கு இயக்குநர் தடய அறிவியல் துறை சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு ஆலோசனை வழங்குமாறு அறிக்கை வழங்கினேன். நான் சம்பவ இடத்தை பார்வையிட்டு வழங்கிய அறிக்கை அ.சா.ஆ.13 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

காவல் ஆய்வாளர் என்னிடம் எழுத்து மூலமான வேண்டுகோள் கொடுக்கவில்லை. எனக்கு தகவல் கிடைத்தபோது இரவு 9.30 மணி இருக்கும். மறுநாள் சம்பவ இடத்தை ஆய்வு செய்த போது காலை 7.30 மணி இருக்கும். குளிர்சாதன பெட்டியில் மின் உராய்தல் ஏற்பட்டு

வெடிக்க வாய்ப்புள்ளது என்றால் அதில் உள்ள கம்ப்ரஸ்சர் மோட்டர் வெடிக்க வாய்ப்புள்ளது. மின்குளிர்சாதன பெட்டியே வெடித்து சிதற வாய்ப்பில்லை. நான் வழங்கிய கருத்துரை அறுதியான முடிவு இல்லை. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவத்தை ஆய்வு செய்யவில்லை என்றும், காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதன் பேரில் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.